<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 79/2019 | சாட்சியம் | : | **RW1** |
| **Name** | : | திரு.முரளி | | | |
| **Date** | : | **05.04.2025** | | | |
| **Time** | : | **11.26 a.m to 12.05 P.m** | | | |

<u>எ.த.சா.**1** திரு.முரளி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

மனுதாரர் என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்ததன் அடிப்படையில் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அவரை வேலையில் இருந்து நீக்கிவிட்டதாக சொல்லி தாக்கல் செய்து இருக்கிறார். நான் தற்சமயம் இரண்டாம் எதிர்மனுதாரர் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்னர் நான் முதல் எதிர்மனுதாரர் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். வழக்கின் முழு விவரம் தெரியுமா என்றால் ஆவணங்கள் படி தெரியும். 01.04.2019 அன்று முதல் எதிர்மனுதாரர் கம்பெனியில் நான் வேலைக்கு சேர்ந்தேன். 01.11.2023 இரண்டாம் எதிர்மனுதாரர் கம்பெனியில் நான் வேலைக்கு சேர்ந்தேன். நான் முதல் எதிர்மனுதாரர் கம்பெனியில் வேலை செய்து வந்த காலகட்டத்தில் எனக்கு மனுதாரரை தெரியும் என்றால் இல்லை. மனுதாரர் முதல் எதிர்மனுதாரர் கம்பெனியில்

டெக்னிகல் ஆப்ரேட்டர் Grade-1 ஆக பணிபுரிந்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு பணி நீக்க உத்தரவு எந்த வகையில் வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. மனுதாரர் வாங்கிய சம்பளம் எவ்வளவு என தெரியாது. மனுதாரர் ஐடி 122/2014 தாக்கல் செய்த விவரம் தெரியாது. அந்த வழக்கில் 18.03.2015 அன்று மனுதாரருக்கு மீண்டும் வேலை வழங்கி பின் சம்பளத்துடன் அனைத்து சலுகைகளும் வழங்க உத்தரவிடப்பட்ட விவரம் தெரியாது. அந்த உத்தரவு முன்னிலைக்கு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 16 லட்சத்து 73 ஆயிரத்து 700 வழங்க வேண்டிய உள்ளது என்றால் தெரியாது. நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் காலம் கடத்தி வருகிறோம் என்றால் இல்லை. இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலம் ஆஜராகி போதிய கால அவகாசம் பதில் உரை தாக்கல் செய்ய வழங்கப்பட்ட பின்னரும் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டு இருந்த நிலையில்தோன்றா தரப்பினராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய கேட்டு மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அதன் பின்னர் பதிலுரை எங்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் தெரியாது. முதல் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த ஆண்டு மூடப்பட்டது என்றால் 04.06.2021 அன்று என்.சி.எல்.டி ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன்பிறகு 2022 - 2023 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்துடன்

ஒருங்கிணைக்கப்பட்டது. இரண்டாம் எதிர்மனுதாரர் கம்பெனி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்றால் தொடங்கி சுமார் 50 ஆண்டுகள் ஆகிறது. முதல் எதிர்மனுதாரர் நிறுவனம் எதற்காக மூடப்பட்டது என்றால் கடன் கொடுத்தவர்கள் வழக்கு தாக்கல் செய்ததன் அடிப்படையில் என்.சி.எல்.டி உத்தரவு மூலம் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. நான் என்னுடைய சாட்சியத்தில் முதல் எதிர்மனுதாரர் நிறுவனம் பெரிய நஷ்டத்தை சந்தித்து வருவதாக வழக்கிற்காக சொல்லி இருக்கிறேன் என்றால் தவறு. ஐடி 122/2014 வழக்கில் தீர்வும் பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிந்த பின்னரும் கூட ரெசல்யூஷன் பிளான் தயாரிக்கப்பட்ட சமயத்தில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை சம்பந்தமாக தெரிவிக்காமல் மறைக்கப்பட்டு அதன் பின்னர் இந்த நீதிமன்றத்தில் நிறைவேற்ற மனோ தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்த நீதிமன்றத்தில் ரெசல்யூஷன்ப் ரொபஷனல்ஸ் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அந்த பிரமாண பத்திரத்தில் அவர்களை அனுகி உரிய படிவங்களை தாக்கல் செய்ய வேண்டும் என சொல்லியிருந்ததன் அடிப்படையில் மனுதாரர் 12.10.2022 அன்று படிவம் டி மற்றும் பிரமாண பத்திரம் ஐடி.122/2014 உத்தரவு நகலுடன் தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. நான் என்னுடைய சாட்சியத்தில் முதல் எதிர்மனுதாரர் நிறுவனம் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைந்து விட்டதாக சொல்லி இருக்கும் காரணத்தினால் முதல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை இரண்டாம் எதிர் மனுதாரர் கொடுக்க

கடமைப்பட்டுள்ளது என்றால் தெரியாது. IBA.1237/2019ல் 22/3/2023 அன்று தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் அதற்கு முன்னரே 12.10.2022 அன்று மனுதாரர் உரிய ஆவணங்களை அவர்களிடம் சமர்ப்பித்து விட்டார்கள் என்றால் தெரியாது. ஐடி.122/2014 இல் தீர்ப்பான விவரம் பற்றியும் மற்றும் சிபி.79/2019 நிலுவையில் இருக்கும் விவரத்தை எதிர்மனுதாரர் நிறுவனம் Resolution Professional லிடம் வேண்டுமென்றே தெரியப்படுத்தாமல் மறைத்து விட்டோம் என்றால் இரண்டாம் எதிர்மனுதாரர் அதுபோன்று செய்யவில்லை. நீதிமன்ற உத்தரவு முன்னிலைக்கு மனுதாரருக்கு நிர்வாகம் பணம் கொடுக்க கடமைப்பட்டிருக்கும் பொழுதும் அவருக்கு பணம் கொடுக்காமல் இருக்க வேண்டி நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வருவதாக பொய்யான சாட்சியம் முன்வைக்கப்படுகிறது என்றால் தவறு.

முடிக்கப்பட்ட நேரம் - 12.05 p.m

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Presiding Officer,
Labour Court

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.04.12 18:04:13 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:05.04.2025.